தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044-2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in

Lr. No.TNTEU/R/Circular/2018-19/2044 Date: 25.09.2018

# சுற்றறிக்கை

**பொருள்:** பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள்- மாணவர்களின் குறைகளைக் (grievances) களைதல்- கல்லூரி முதல்வரது பரிந்துரையுடன் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் - நடைமுறைகள் - தொடர்பாக.

-------

இப்பல்கலைக்கழக இணைவுடன் செயல்படும் கல்வியியல் கல்லூரிகளில் கல்வி பயிலும் பல மாணவ மாணவிகளின், தேர்வு முடிவுகள், சான்றிதழ்கள் தொடர்பான குறைகள் (grievances) குறித்த விண்ணப்பங்களை நேரிடையாகப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கின்றனர். இம்மாதிரியான செயல்கள் அலுவலக நடைமுறைகளுக்கு உகந்ததன்று. பல மாணவர்கள் நேரிடையாகவே இப்பல்கலைக்கழக அலுவலகத்திற்கு வருகைபுரிந்து அவர்களது நேரத்தையும், தேவையில்லாத செலவினங்களையும் மேற்கொள்கின்றனர். இவ்வாறு மாணவர்களை சிரமத்திற்குட்படுத்தாமல், அவர்களது நலனிலும், முன்னேற்றத்திலும் பெரும்பங்கு வகிக்க வேண்டிய கல்வியியல் கல்லூரிகள் கீழ்க்கண்ட நடைமுறைகளை இனிவரும் காலங்களில் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

- **மாணவர்களுக்கு, தேர்வு முடிவுகள், சான்றிதழ்கள் தொடர்பான குறைகள் (grievances) இருப்பின், மாணவர்கள் அது தொடர்பான வேண்டுகோள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.**

- **கல்லூரி முதல்வர், உடனே விண்ணப்பங்களைக், கல்லூரிப் பதிவேடுகளுடன் சரிபார்த்து, மாணவர்கள் குறிப்பிடும் குறைபாடுகள் சரியென்றால், அத்தகைய விண்ணப்பங்களை எந்தவிதக் காலதாமதமும் இன்றி, முதல்வரது பரிந்துரையுடன் உடனே பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.**

- **பல்கலைக்கழகம், அதன் மீது நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த நடவடிக்கையின் விவரத்தை, முதல்வர் சம்பந்தப்பட்ட மாணவருக்குத் தெரிவிப்பார்.**

- **கல்லூரி முதல்வர்களது பரிந்துரையுடன் பெறப்படும் மாணவர்களது வேண்டுகோள் விண்ணப்பங்களை மட்டுமே பல்கலைக்கழகம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.**

குறிப்பு: இச்சுற்றறிக்கையை அனைத்துக் கல்லூரிகளும், கல்லூரி அறிவிப்புப் பலகையில் ஒட்டி கல்வி ஆண்டு முழுவதும் மாணவர்களது பார்வையில் வைத்து பராமரிக்க வேண்டும்.

25/9/18

**பதிவாளர் (பொ)**

பெறுநர்

முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.